# மழை! மழை! மழை!



மழை ! மழை ! உலகெங்கும் நின் கருணை ,

மழை பொழிந்திட வேண்டுகிறேன் - கண்ணா !
மழை ! மழை....

அழையாமலே அன்று அஜாமிளன் செய்த ,

பிழைகளை மறந்து நீ காட்டிய கருணை -

மழை இந்த உலகினர் மீதும் பொழிந்திட ,

விழைகின்றான் இந்த அடியவனும் கண்ணா !

மழை ! மழை .......

விழையாமலே மனம் அறிந்து அன்று ,

பழையதோழனுக்கு காட்டிய நின்பரிவு -

தழைத்து இந்தஉலகம் உய்ந்திட இன்று ,

அழைக்கின்றான் இந்த அடியவனும் கண்ணா !

மழை! மழை......